உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞான ஸம்பந்த குருப்யோ நம:

9

# சைவ நித்தியாநுஷ்டானம்.

(தமிழ் கிரந்த லிபிகளில் மந்திரங்களும்
அஷ்டஸம்ஸ்கார விளக்கமும்)

இஃது

சித்தாந்த சைவசரபம்
சோளங்கிபுரம்
**ஸ்ரீலஸ்ரீ. சிவ அருணகிரி முதலியார்**
அவர்களாலியற்றப்பெற்று,

கொத்தமங்கலம்
**ஸ்ரீமாந். தே. பழ. சித. சதாசிவச் செட்டியார்**
அவர்கள் நல்லாதரவால்,
சென்னை
ஆரியகலா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

ருத்ரோத்காரி௵ ஆவணிமீ.
1923.

Copy Right Registered. விலை ரூ. 0—6—0

Printed at the Aryakala Press,
Park Town, - - Madras.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இவ்வரிய "சைவநித்தியாநுஷ்டானம்" என்னும் பெருமைவாய்ந்த நூல் அறங்கிடந்த நெஞ்சும், அருளொழுகுகண்ணும், சிவபெருமான் றிருவடிக்கே கசிந்த சிந்தையும் உடையவரும், பரிசுத்தமான உள்ளமும், பரமசாந்தமும், நிராசையும் பெற்றவரும், கொல்லாவிரதமொன்றேகுவலயமெலாமோங்கப் பாராட்டித் தீரமாய்ப் பேசுபவரும், புண்ணிய நூலல்லாத கேள்விகளைக் கனவிலுங் கருதாதவரும் ஆகிய எனது ஆப்தசிகாமணி கோத்தமங்கலம். ஸ்ரீமான், தே. பழ. சித. சதாசிவச்செல்வப் பெருந்தகையினிடத்தில் அடியேன் நிலையாக வைத்துள்ள அன்பினீட்டத்திற்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டது.

சோ. சிவ அருணகிரி முதலியார்.

சிவமயம்.

# சைவ நித்தியாநுஷ்டான விஷய அட்டவணை.


| எண் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| க. | முகவுரை | ... | 1 |
| உ. | அநுஷ்டானக்கிரியாவிதி | ... | 12 |
| ங. | அநுஷ்டானக்கிரியாரம்பம் | ... | 17 |
| ச. | பூசுத்தி | ... | 18 |
| ரு. | கணபதி வந்தனம் | ... | 19 |
| சு. | குருவந்தனம் | ... | 19 |

ஜலசுத்தி.

| | | | |
|---|---|---|---|
| எ. | அஷ்டஸம்ஸ்காரம் | ... | 19 |

க. நிரீக்ஷணம்

உ. புரோக்ஷணம்

ங. தாடனம்

ச. அப்யுக்ஷணம்

ரு. தாளத்திரயம்

சு. திக்பந்தனம்

எ. அவகுண்டனம்

அ. தேநு முத்திரை

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

அன்பிற்சிறந்த சைவர்காள்!

நெடியகடல் சூழ்ந்த இந்நிலவுலகத்தின் கண்ணே அளவிறந்த சமயங்கள் பரவியிருப்பது யாவரு மறிந்தவிஷயம். அந்தச்சமய பேதங்கள் யாவும் அந்தந்த ஆத்மாக்களுடைய கர்மபரிபாகத்துக்குத் தக்கவாறும் புத்தி, சக்தி, குணம், தேகபலம், மனோவுறுதி ஆகிய இவற்றிற்கேற்றவாறும் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து அவ்வப்போது பலபுத்திமான்களாலே அமைக்கப்பட்டனவன்றோ! அவற்றுள் சிலசமயங்கள் தத்துவஞான சித்தியுடையோரால் நிறுவப்பட்டன. வேறுசில, கலைஞானமுடையோரால் ஸ்தாபிக்கப்பட்டன. மற்றுஞ்சில, பிரா

கிருத விசேஷ புத்திமான்களால் ஏற்படுத்தப்பட்டன. இன்னுஞ்சில, பிராகிருத சாமான்ய புத்திமான்களால் அமைக்கப்பட்டன. இவ்வாறு சமயபேதங்கள் யாவும் மனிதர்கள் நல்லறிவுபெற்று உண்மையுணர்ந்து இன்ப வாழ்வு அடைதற்பொருட்டே பலபுத்திமான்களாலே திருவருளை முன்னிட்டுப் பல சாதனங்களாக அமைக்கப்பட்டன. ஆதலால் அவை யாவும் சமுத்திரகலச நியாயம்போல் விளங்கிக்கொண்டிருக்கும். அச்சமய பேதங்களெல்லாவற்றையுந் தன்னுள்ளடக்கித் தான் அவற்றிெனான்றினுள்ளும் அடங்காது யாவற்றினும் முதன்மை பெற்றுச் சித்தாந்தமென வேத சிவாகமங்கள் புகழாநிற்கச் சமய அரசாய் வீற்றிருப்பது சைவசமயமொன்றேயாம். இச்சமயம் ஏனைய சமய ஆசாரியர்களைப் போல மலசகிதராய்ப் பிறந்திறந்துழலும் உயிர்வர்க்கங்களுள் ஒருவராயில்லாமல் பிறந்திறவாப்

பெரு வாழ்வுடைய பரமபதியாகிய சிவபெருமானாலே நிறுவப்பட்டது. ஆதலின் இஃதொன்றே யாவற்றினும் ஒப்புயர்வற்று விளங்கும் மெய்ச்சமயமாம். இதின் பிரதமாசாரியர் மோனஞானத்தினைக் குறிப்பாயுணர்த்தியருளிய ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியென்னுந் தென்முகத்தெய்வம். இவரது கரத்தில் விளங்குஞ் சின்முத்திரையே இச்சமயவிலக்கணங்களையும் அத்துவிதானந்த முத்தியையும் நன்கு நிரூபியாநிற்கும்.

இத்தகைய அரிய பெரிய சமயம் சைவசமய மரபிலே பிறந்த ஒவ்வொருவருக்கும் அளவிறந்த புண்ணிய சுகிர்தத்தினாலே வாய்த்திருந்தும். இதின் அருமைகளைச் சிறிதுஞ் சிந்தியாமல் இவர்கள் தங்கள் காலமுழுமையும் மாயாவாத நூல்களிலே மிகவுஞ் செலுத்தித் தங்கள் மனத்தை அவ்விஷயங்களில் மிகவுங் கூறுக்கிவிட்டபடியாலும், சைவசமய நூலாராய்ச்சியேனும், அச்சமய

நூலுடையார் சகவாசமேனுஞ் சிறிதுமின்றித் தங்காலத்தை அவமே கழித்தமையாலும், சகல சமயங்களுக்கும் மாதுருஸ்தானமாயுள்ள இச் சைவசமயநெறியை ஏனைய சமயங்களுள் ஒன்றுபோல மதித்து ஏமாந்துபோகின்றார்கள். அந்தோ! இது மிகவும் பரிதாபம். "புண்ணிய நூலல்லாத கேள்வியைக் கேட்டிடுந்தீங்குகள்" எனவும், "பசு நூல் கற்கும் பிச்சரைக் காணு கண்வாய், பேசாதப்பேய்களோடே" எனவுங் கூறிப்போந்த அமுதவாக்கியங்களை இவர்கள் இனியேனுங் கூர்ந்து யோசித்துப் பார்த்து உய்வார்களாக.

பந்தமுத்தி, பதமுத்தி, அபரமுத்தி, பரமுத்தி என்னும் நால்வகை முத்திகளுள் இறுதிக்கண்ணதாகிய பரமுத்தியை யடைவதற்கு ஞானமே சிறந்த சாதனமாயுள்ளது. சூரியகாந்தக் கல்லானது ஆதித்த கிரணமின்றி அக்கினியையுமிழுமாயின் ஒருவரு

க்கு ஞானமின்றி பரமுக்தியுங்கைகூடும். அந்த ஞானமும் கேட்டல், சிந்திக்கல், தெளிதல், நிஷ்டை என நான்கு திறனாக விளங்கும். அத்தகைய ஞானத்தைப் பெறுவதற்கு நேர்வாயிலாக வுள்ளவை சரியை, கிரியை, யோகமென்னுஞ் சோபானங்களே. அச் சோபானங்களில் ஒழுகுவோருக்குச் சிவதீக்ஷை மிக்க அவசியமாகும். அச்சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு நித்தியாநுஷ்டானம் அநுஷ்டிப்பவரே சைவரெனக் கூறப்படுவர். ஏனையோர் சைவசமய மரபிலேபிறந்து திருவெண்ணீறணியும் பாக்கியம் பெற்றிருந்தாலும் சைவரென அழைக்கப்படார். தீக்ஷை ஆத்மாக்களுக்குப் புத்தி முத்தி பலன்களை யளித்துப் பாசக்ஷயஞ் செய்வதால் அது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாது வேண்டப்படும்.

தீக்ஷை பெற்றுக்கொண்ட சைவருள்ளும் அநேகர் தந்தந்தொழில் முறைகளிலேயே

பெரிதுங் காலத்தைப் போக்கி ஒரு சிறுபொழுது மாத்திரம் உயிர்க் குறுதியைத்தருஞ் சிவதீக்ஷாநுஷ்டானத்தில் கழித்து விபூதியை மட்டும் குழைத்து இட்டுக்கொள்வதும் மூலமந்திரத்தை மாத்திரம் சமயோசிதமாய் ஜபித்தலுமாயுள்ளார்கள். இன்னோர் இவ்வாறு செய்வதால் ஆயுள் குன்றுவதோடு தவமுங் குன்றிவிடுகின்றது. அல்லாமலும், பணக்காரருட்பலர் கௌபீனந் தரிப்பது தங்கள் கௌரவத்திற்குக் குறைவெனக் கருதியோ கௌபீனந் தரிக்காமலே இடம்பநிமித்தமாய் நாடோறும் அநுஷ்டானஞ் செய்து வருகின்றார்கள். இவர்களின் ஊழ்வலி எத்தகையதோ! நீர்க்குமிழிபோல் நிலையற்று ஒழிந்துபோகும் பொய்யுடலை மெய்யனவெண்ணி அவ்வுடலை ஓம்புதற்கே பாடுபடும் இவர்களது அற்பச்செய்கை இருந்தவாறு என்னே! என்னே!!

"மின்னனைய பொய்யுடலை மெய்யென்று

நம்பியையோ, நின்னைமறக்கை நெறியோ பராபரமே" என்று திருவாய்மலர்ந்தருளினார் நம் அருட்பெருஞ் செல்வமாகிய ஸ்ரீ தாயுமான சுவாமிகள். சிலர் ஜலம் நிறைந்த ஓர் பித்தளை குவளைக்குள்ளே தர்ப்பண முதலிய சர்வ அநுஷ்டானக் கிரியைகளையுஞ் செய்துவருகின்றார்கள். இவர்கட்குத் தீக்ஷை செய்வித்த தற்கால ஆசாரிய சுவாமிகளும் இவர்கள் நித்தியாநுஷ்டானத்தை விதிப்படி க்ரமமாய்ச் செய்து வருகின்றார்களா வென்பதைப்பற்றி அவ்வப்போது கவனிக்கின்றார்களில்லை. தங்கள் தங்கள் வருவாயையே முக்கியமாய் நோக்கி யிருக்கின்றார்கள். அறப்பெருஞ் செல்விபாகத் தண்ணலே! தேவரீரே இவ்விஷயத்தில் நல்லறிவுச் சுடர் கொளுத்தி உண்மையை உண்ணின்றுணர்த்தி அருள்புரிவீராக.

இஃதிங்ஙனமாக, இந்நூலுட் கூறியுள்ள ஒவ்வொருகிரியையும் ஒவ்வொரு மந்திரத்

தை யுடைத்தாயிருக்கின்றது. மந்திரமின்றிக் கிரியையில்லை யாதலின் மந்திரம் ஒவ்வொரு கிரியைக்கும் இன்றியமையாது வேண்டப்படும். மந்த்ரம் என்பது மநநம்-த்ராணம் என்னும் இருசொற்களின் புணர்ச்சி. இவை முறையே யாவற்றையும் அறியுந்தன்மை. ஸம்ஸாரக்கடலினின்றுங் கரையேற்றி விடுந்தன்மை என்னும் பொருளுடையன. இவ்விரு தன்மைகளையும் இம்மொழி இயல்பாகவே பெற்றிருத்தலால் மந்திரமென்று சொல்லப்பட்டது. இத்தகைய சிரேஷ்டமாகிய மந்திரத்தை ஆசாரியனுடைய ஆணையை முன்னிட்டே கிரகித்தல் மரபாகும். அவ்வாறின்றித் தானே கிரகிக்கும் மந்திரம் விபரீதத்தையே யுண்டுபண்ணும். ஆசாரியன் ஆணையினாலே கிரகிக்கப்படும் மந்திரமுங் கூட செவ்வனே உச்சரிக்கப்பழகாவிடின் நிஷ்பலமாகப் போய்விடும். ஆனது பற்றியே யாவரும் எளிதில் பழகுவதற்குச்

சாதனமாக ஒவ்வொரு மந்திரமுங் கிரந்த லிபியில் வெளிப்படுத்தலாயிற்று. மந்திரங்கள் யாவும் உதயகாலத்திலேயே கிரகிக்கத் தக்கவை. அக்காலத்தில் அவைகள் இன்பத்தைத் தருகின்றன.

சிலர் அநுஷ்டானஞ் செய்வதற்குச் சோம்பலுற்று நித்தியகர்மானுஷ்டானம் மிகவும் கடினமாயுள்ளதென்று அதைக் கைவிடுகின்றார்கள். அது சிறிதும் பொருத்தமின்று. நியாயமு மன்று. அநுஷ்டானத்தை யாதொரு லோபமில்லாமல் விதிப்படி செய்து முடிக்கவேண்டுமாயின் குறைந்தது பதினைந்து நிமிஷகாலம் போதுமானது. நூலிற் சொல்லியுள்ள கிரியைகள் ஆரம்பத்தில் விரிவாகக் காணப்படினும் பழக்கத்துக்குக் கொண்டுவந்துவிடின் வெகு சுலபமாய்க்காட்டும். அன்றியும் அநுஷ்டானவிதி தெரிந்தவர்களிடம் ஒருமுறை சிரத்தையோடு கேட்டுப் பழகின் கிரியைகளனைத்தும் எளிதில் புலப்பட்டுவிடும்.

இந்நூல் சமயதீக்ஷிதர்களுக்கே பிரயோசனமாகும் பொருட்டுச் சில முக்கிய பிரதிகளை பரிசரித்து அன்பினீட்டத்தால் வரையப்பட்டதாகலின் இதில் சில வித்தியாசங்கள் காணப்படின் அவை அப்பரம்பரையின் வழிவந்த பேதங்களென்று கொள்ள வேண்டும். காமிகாகமும் ஓராகமத்திற் கூறப்படாத கிரியைகள் மற்றோர் ஆகமத்தில் காணப்படின் அவற்றையுஞ் சேர்த்து அநுஷ்டிக்க வேண்டுமென்று விதித்திருக்கின்றது. ஆதலால் அவை குற்றமாகா. ஓர் ஆதீனத்துப்பிரதிக்கு மற்றோர் ஆதீனத்துப் பிரதி மிக வேற்றுமைப்படுவதற்கும் இதுவே முக்கிய காரணமாம். அல்லாமலும், இவ்வநுஷ்டானம் சமய தீக்ஷிதர்களுக்கே உரியதாதலின் அவர்களுக்குப் பஞ்சப் பிரம்ம ஷடங்க நியாசமில்லை. ஷடங்க நியாசம் ஒன்றே யுரியது. அவர்கள் பீஜங்கூட்டியும் மந்திரங்களை உச்சரிக்கலாகாது. ஆகலினாலே இவ்விரண்டுமில்லாமல் இந்நூல்

வரையப்பட்டதென் றுணரவேண்டும்.

இவ்வரிய நூல் வெளிவருவதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் வைசிய சிகாமணியாகிய நடராஜபுரம் ஸ்ரீமாந் ஆ. க. ஆ. சொக்கலிங்கச் செட்டியாரவர்கள். இவர்கள் அடியேன்பால் அநுஷ்டான விதியைத் தெரிந்துகொண்டு கிரமமாய் தினந்தோறும் அநுஷ்டானஞ்செய்து வருகின்றவர். இவருடைய பக்தியின் திறமும், சைவசமயாபிமானமும், சிவநேசமும் அடியேன் வெளிப்படுத்திய "பிரணவ வித்தியாபரிமளம்" என்னும் ஓங்கார விளக்க உரிமையுரையிற் காணலாம். இவருக்கு எல்லாம்வல்ல பரமசிவம் தமது தெய்வ வருட்கருணையைப் பிரசாதித்தருளும்படி அப்பெருமான் திருவடிப்போதுகளைப் பன்முறையும் பணிந்து வேண்டுகின்றனன். சிவம்! சிவம்!! சிவம்!!!

மெய்கண்ட தேசிகன் திருவடிவாழ்க.

| | |
|---|---|
| ருத்ரோத்காரி ஆவணிமீ | சோளங்கிபுரம் சிவ அருணகிரி முதலியார். |

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவ நித்தியாநுஷ்டானக் கிரியாவிதி.

கற்றதனாலாய பயனென்கொல்வாலறிவன்
நற்றாடொழா அரெனின்.

தினந்தோறும் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னுவது, இரண்டரை நாழிகைக்கு முன்னுவது, ஒன்றேமுக்கால் நாழிகைக்கு முன்னுவது நித்திரைவிட்டெழுந்து புறத்தேசென்று இயன்றளவு சுத்திசெய்து கொண்டு வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்து விபூதியை எடுத்துப்பூமியிலே சிந்தாவண்ணம் அண்ணாந்து கொண்டு "சிவசிவ" என்று உச்சரித்து வல

க்கையின் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியில் தரித்தல் வேண்டும். பிறகு கணபதியையுங் குருவையும் நமஸ்கரித்துச் சிவபெருமானுடைய திவ்விய மங்கள உருவத் திருமேனியைத் தியானஞ்செய்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் சக்தியாநுசாரம் ஜபித்துத் தோத்திரஞ் செய்யவேண்டும். சிவத்தியானத்துக்கு மனந் தெளியுங்காலம் சூரியன் உதிக்க ஐந்து நாழிகை உண்டென்னுங்காலமே. அக்காலத்துக்கே "ப்ராம்ஹீ" முகூர்த்தம் என்று பெயர். அக்காலத்தில் விழித்திருக்கின் நோய்களும் அணுக அஞ்சும். சிவனாணையுமிது.

அதன்பிறகு எழுந்து புறத்தே சென்று மலஜல விசர்க்கஞ்செய்து சௌசம் பண்ணித் தந்தசுத்தி, ஸ்நானம் இவற்றை விதிப்படி முடித்துக்கொண்டு உலர்ந்த வஸ்திரத்தினாலே சரீரத்திலுள்ள ஈரத்தைப்போக்கி, உலர்ந்த கௌபீனத்தைத் தரித்து இரண்டு கைகளையுங் கழுவி, தோய்த்து உல

ர்ந்த வஸ்திரங்களை யணிந்து நெற்றியிலே விபூதியைப் பூசி அநுஷ்டானஞ் செய்ய ஆரம்பிக்கவேண்டும். எப்பொழுதும் ஈர வஸ்திரத்தையாவது, ஒரே வஸ்திரத்தையாவது, கௌபீனம் ஒன்றையேயாவது உடுத்திக்கொண்டும், மறந்துங் கௌபீன மில்லாமலும் விபூதிதாரணமாவது அநுஷ்டானமாவது செய்யலாகாது. அப்படிச்செய்யின் பலனில்லை. பாவமும் உதயகால சூரியவெளிச்சம் போல் ஏறும்.

நோயினாலே ஸ்நானஞ்செய்ய மாட்டாதவர் சரீரத்தை ஈரவஸ்திரத்தினாலே ஈரம்படும்படித் துவட்டி முன் சொன்னபடி தோய்த்துலர்ந்த கௌபீனத்தையும் வஸ்திரத்தையுந் தரித்து அநுஷ்டானஞ்செய்யவேண்டும். அதுவுஞ்செய்ய இயலாதவர் நெற்றியிலே விபூதியை யணிந்து சிவபெருமானைத் தியானித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் சிந்தித்துக் கொண்டிருத்தல் வேண்டும். ஸ்நானமா

ணது சரீரசுத்திக்கு மாத்திரமன்று. சரீரா ரோக்கியத்துக்கும், மனம் ஒருவழிப்படுதற் கும், இந்திரிய நிக்கிரகத்திற்கும், யோக்கி யத்துவத்துக்கும ஏதுவாகும். இது லௌ கிக வைதிக அநுபவம்.

சமயதீக்ஷிதருக்குப் பிராதக்கால அநுஷ் டானம் ஒன்றே உரியது. வேண்டுமானால் சாயங்கால அநுஷ்டானத்தையுஞ் செய்ய லாம். அதனால் பாவந் தேய்ந்து புண்ணியமே வளரும். எப்பொழுதும் பிராதக்கால அனு ஷ்டானம் ஆகாசத்தில் நக்ஷத்திரங்கள் கண் ணுக்குத் தோன்றிக்கொண்டிருக்கும்பொழு து செய்வதே உத்தமம். நக்ஷத்திரங்கள் மறைந்தபொழுது செய்வது மத்திமம். சூரி யன் உதிக்கும்பொழுது செய்வது அதமம். சாயங்கால அநுஷ்டானம் சூரியன் அஸ்த மிக்கும்பொழுது செய்வது உத்தமம். அஸ்த மயமானபின் நக்ஷத்திரங்கள் தோன்றுமுன் செய்வது மத்திமம். நக்ஷத்திரங்கள் தோன்

றும்பொழுது செய்வது அதமம். இந்தக்கா லங்களில் அநுஷ்டானஞ்செய்ய முடியாதாயின் "ஸம்ஹிதா மந்த்ரம்" என்னும் பஞ்சப்ரம்ம மந்திரங்களையும், ஷடங்கமந்திரங்களையும் உச்சரித்துப் பின் அநுஷ்டானஞ் செய்தல் வேண்டும். அநுஷ்டான காலங்களில் நித்திரை செய்வது மகாபாதகமாகும். சிவாபராதமுஞ் செய்ததாகும்.

அநுஷ்டானமே உயிர்க்குறுதியைத் தந்து சித்தசுத்தியை யுண்டுபண்ணி முமுட்சுத்துவத்தை யளித்து ஜீவன் முத்தனுக்குந் தன்மைத்தாதலின் அதை மரணபரியந்தம் விடலாகாது. இது சத்தியம். முக்காலுஞ்சத்தியம்.

உற்றாரா ருளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத் துறை கூத்தனல் லானமக்
குற்றா ராருளரோ.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சமயதீக்ஷிதர்களுக்குரிய
# சைவ நித்தியாநுஷ்டானம்.

சைவசமய நெறியிலே உறுதியாய்நின்று சமயதீக்ஷை பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் விதிப்படி ஸ்நானஞ் செய்தவுடனே உலர்ந்த சுத்தவஸ்திரத்தினாலே ஈரத்தைப் போக்கி "சிவசிவ" என்று நெற்றியிலே விபூதிதரித்து வேறொரு உலர்ந்த சுத்தவஸ்திரத்தை அரையிற்றரித்து அதன்மீது மேல்வஸ்திரத்தையுமணிந்து அநுஷ்டானபாத்திரத்தை நன்றாகத்தேய்த்து,

"ஓம் அஸ்த்ராயநம: — ஓம் அஸ்த்ராய நம:"

என்று இருமுறை கழுவிச் சுத்திசெய்து

"ஓம் ஹ்ருதயாயநம: — ஓம் ஹ்ருதயாய நம:"

என்று நன்ணீயபுஷ்பமுதலான ஜந்துக்கள்

அடையாததாயும், நுரைகுமிழி முதலான
வை யில்லாததாயும், இழிகுலத்தார் ஸ்நா
னஞ் செய்யாதார் தீண்டாததாயும், கலங்
கல், பாசி, உவர், பழமையாகிய நீர் அற்ற
தாயுமுள்ள சுத்தஜலத்தை அதிற்பூரித்
துப் பின் தான் அநுஷ்டானஞ் செய்ய
இருக்குமிடத்தை நோக்கிச்சென்று வடக்
கு முகமாகவேனும், கிழக்குமுகமாகவே
னும் நின்றுகொண்டு,

## க. பூசுத்தி - ஸம்ஹாரம்.

ஓம் அஸ்த்ராய பட் - ஓம் ஸ்வாஹா
என்று தன் கரத்திலுள்ள ஜலத்தில் சிறி
தெடுத்துத் தெளிக்க. பிறகு பீடத்தின்
மீதாவது அல்லது வெள்ளை வஸ்திரத்தை
விரித்து அதன்மீதாவது உட்கார்ந்து வி
பூதியை உத்தூளனமாகப் பூசிக்கொண்டு
ஜலபாத்திரத்தை இடதுபுறமாகவும், தாம்
பிரத்தட்டை வலதுபுறமாகவும் வைத்து
காப்புச் செய்வதாகிய முறை கணபதியின்

இவ்விய மங்கள வுருவத்தை இருதயத்தில் ஒருமைப்பட்ட மனதோடு சிந்தித்துக் கொண்டு

## ௨. கணபதி வந்தனம்
## 𑌗𑌣𑌪𑌤𑌿 𑌵𑌨𑍍𑌦𑌨𑌮𑍍.

"ஓம் கணபதயே நம: - 𑍐 𑌗𑌣𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃" என்று முஷ்டியாகப் பிடித்த இரு கரங்களினாலும் சிரசிலே மும்முறை குட்டிக்கொள்க. பின்

## ௩. குருவந்தனம் - 𑌗𑍁𑌰𑍁𑌵𑌨𑍍𑌦𑌨𑌮𑍍.

"ஓம் குருப்யோநம: - 𑍐 𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃" என்று தாமரை முகுளம் போன்ற நமஸ்கார முத்திரையினாலே புருவமத்தியிலே கும்பிடுக.

## ௪. அஷ்ட ஸம்ஸ்காரம்
## 𑌅𑌷𑍍𑌟 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌮𑍍.

அதாவது எண்வகை சுத்தி — அநுஷ்டான ஜலத்தைச் சுத்தி செய்யுமுறை.

**க-வது நிரீக்ஷணம் - 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑌂.**

"ஓம் சிவாயநம: - 𑌓𑌂 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃" என்று வலது கைப் பெருவிரலையும் அணிவிரலையுஞ் சேர்த்தலாகிய திவ்யமுத்திரையினாலே வலக்கண், நெற்றிக்கண், இடக்கண்களை முறையே தொட்டுச் சுட்டுவிரல் நடுவிரல்களை நீட்டிப் பெருவிரல் அணிவிரல்களின் வழியாக ஜலத்தைப் பார்த்தலென்னும் நிரீக்ஷணமும்,

**உ-வது புரோக்ஷணம் - 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌣𑌂.**

"ஓம் அஸ்த்ராயபட் - 𑌓𑌂 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌫𑌟𑍍" என்று வலதுகை விரல்களைச் சேர்த்து நிமிர்த்தி நீட்டுதலாகிய நிமிர்த்திய பதாகை முத்திரையினாலே ஜலத்திற்றெளித்தல் என்னும் மேலே உயர்த்துதலாகிய புரோக்ஷணமும்.

**ங-வது தாடனம் - 𑌤𑌾𑌡𑌨𑌂.**

"ஓம் அஸ்த்ராயபட் - 𑌓𑌂 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌫𑌟𑍍"

என்று வலதுகைச் சுட்டு விரலை நீட்டி மற்ற விரல்களை மடக்கிக்கொண்டு அச் சுட்டுவிரலால் கீழ்நோக்கித்தட்டுதலென்னுந் தர்ட்டணமும்,

ச-வது அப்யுக்ஷணம்-அப்யுக்ஷணம்.

"ஓம் கவசாய வௌஷட் - ௐ கவசாய வௌஷட்" என்று கவிழ்ந்த பதாகைமுத்திரையினாலே ஜலத்தை மூடுதலென்னும் அப்யுக்ஷணமும்,

ரு-வது தாளத்திரயம்-தாளத்ரயம்.

"ஓம் அஸ்த்ராயபட் - ௐ அஸ்த்ராயபட்", என்று வலதுகைப் பெருவிரலொழிந்த நான்கு விரல்களினாலே இடது உள்ளங்கையிலே மூன்றுமுறை தட்டுதலென்னுந் தாளத்திரயமும், *

---

* பெருவிரலையுஞ் சிறுவிரலையும் நீக்கி நடு மூன்று விரல்களினாலே மும்முறை தட்டுதலு முண்டு.

## ௬-வது திக்பந்தனம் - திக்பந்தன முத்திரை.

"ஓம் அஸ்த்ராயபட் - ஓம் அஸ்த்ராயபட்" என்று வலக்கைபெருவிரலடியைச் சுட்டு விரலாற் றெட்டுத்தெறித்தலாகிய சோடிகை முத்திரையினாலே கிழக்குமுதல் ஈசானம்வரை எட்டுத்திக்குகளிலும் தெறித்தலென்னும் திக்குபந்தனமும்.

## ௭-வது அவகுண்டனம்

அவகுண்டன முத்திரை.

"ஓம் கவசாயவௌஷட் - ஓம் கவசாயவௌஷட்" என்று சுட்டுவிரல் நீட்டியகையினாலே வளைத்தலென்னும் அவகுண்டனமுஞ் செய்து.

## ௮-வது தேநுமுத்திரை

தேநு முத்திரை.

"ஓம் சிவாய வௌஷட் - ஓம் சிவாயவௌஷட்" என்று இரண்டு கைகளையுங் கூட்டி விரல்களை இடையிடையே கோத்

து. சிறுவிரல்களை அணிவிரல்களோடும் அட்டு விரல்களை நடுவிரல்களோடுஞ் சேர்த்தலாகிய சுரபி முத்திரையினாலே அமிர்தம்பொழிவதாகப் பாவித்துக் கொடுத்தலென்னுந் தேநு முத்திரையுங் கொடுக்க.

## ௫. மஹாமுத்திரை - 𑌮𑌹𑌾𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌃.

"ஓம் சிவாயவௌஷட் - 𑌓𑌂 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌵𑍌𑌷𑌟𑍍" என்று இரண்டு கைகளின் பெருவிரல்களையும் உள்ளடங்கப் பின்னி மற்ற விரல்களை நீட்டி ஜலத்தை மூடுக.

## ௬. அஸ்த்ரஶக்தியோபாசனம்

## 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌮𑍍.

"ஓம் அஸ்த்ராய பட் - 𑌓𑌂 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌫𑌟𑍍" என்று நிமிர்த்திய பதாகை முத்திரையினாலே ஜலத்துளிகளை மும்முறை சிரசிற் றெளித்து.

"ஓம் அஸ்த்ராயஸ்வாஹா - 𑌓𑌂 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾" என்று இரு கைப்பெருவிரல்களை

யும் உள்ளடக்கிச்சேர்த்து மும்முறை தர்ப்பணஞ் செய்து,

"ஓம் அஸ்த்ராய நம: - ஓம் அஸ்த்ராய நம:"
என்று பத்துரு ஜபித்து,

"ஓம் அஸத்ராயஸ்வாஹா - ஓம் அஸ்த்ராயஸ்வாஹா" என்று மறுபடியும் ஒருமுறை தர்ப்பணஞ்செய்க,

## எ. ஆசமனம் - ஆசமநம்.

க-வது ஆசமனம், வலக்கையை விரித்துப் பெருவிரலையும் சிறுவிரலையும் பிரித்து விட்டுப் பெருவிரலடியிற் சார்ந்த உழுந்தமிழும்படியான ஜலத்தை

"ஓம் ஆத்மதத்வாய ஸ்வதா - ஓம் ஆத்மதத்வாய ஸ்வதா"

"ஓம் வித்யாதத்வாய ஸ்வதா - ஓம் வித்யாதத்வாய ஸ்வதா"

"ஓம் ஶிவதத்வாய ஸ்வதா - ஓம் ஶிவதத்வாய ஸ்வதா"

என்னும் மந்திரங்களொவ்வொன்றுக்கும் ஒவ்வொருமுறை ஆசமனஞ்† செய்து இடைஇடை கைகழுவுக (ஆசமனம்-பானம்)

2-வது அதரசுத்தி, அதரங்களிரண்டையும்

"ஓம் அஸ்த்ராயபட் - ௐ அஸ்த்ராயபட்"

என்று வலக்கைப் பெருவிரலடியால் இடமாக இருமுறையும், உள்ளங் கையால் கீழாக ஒருமுறையுந் துடைக்க.

3-வது தொடுமிடம் - பெருவிரலையும் அணிவிரலையுஞ் சேர்த்தலாகிய திவ்யமுத்திரையினலே,

"ஓம் ஹ்ருதயாய வௌஷட் - ௐ ஹ்ருதயாயவௌஷட்" என்று முகம், வலமூக்கு, இடமூக்கு, வலக்கண், இடக்கண், வலக்காது, இடக்காது, நாபி, மார்பு, வலத்தோள் இடத்தோள், சிரசு என்னும் இப்

---

† பெருவிரல் உள்ளேயடங்கக் கையைப் பசுவின் காதுபோலக் குவித்தலாகிய கோகர்ணமுத்திரையால் ஆசமனஞ் செய்தலுமுண்டு

பன்னிரண்டு இடங்களையுந் தொட்டு விடுக.

அ. கரசுத்தி - கரஶுத்தி:.

"ஓம் அஸ்த்ராயபட் - ஹும் ஸஹஸ்ராய ஹூம் பட்"
என்று இடதுகையின் நடு மூன்றுவிரல் களினால் வலது அகங்கையில் ஒருமுறையும், புறங்கையில் ஒருமுறையும், வலது கையின் நடு மூன்றுவிரல்களினால் இடது அகங்கையில் இருமுறையும், புறங்கையில் இருமுறையுந் துடைக்க.

கூ. விபூதிசுத்தி - விபூதிஶுத்தி:.

விபூதியை வலக்கைப் பெருவிரல், நடுவிரல், அணிவிரல்களால் எடுத்து இடதுகையில் வைத்துக்கொண்டு

"ஓம் அஸ்த்ராய பட் - ஸஹஸ்ராய ஹூம் பட்"
என்று அவ்விபூதியிலே ஜலத்தைத் தெளித்து அதில் ஒரு சிறுபங்கைப் பெருவிரல் அணிவிரல்களாலே எடுத்து இராக்ஷ

தர்களாலுண்டாகும் இடையூறு நிவிர்த்தியின் பொருட்டு,

"ஓம் அஸ்த்ராய பட் — அஸ்த்ராய ஃபட்"

என்று தென்மேற்குத் திசையாகிய நிருதி திக்கில் தெறித்துவிட்டு *

"ஓம் சிவாய நம: — ௐ ஶிவாய நம:"

என்று நிரீக்ஷணமும்,

"ஓம் அஸ்த்ராயபட் — அஸ்த்ராய ஃபட்"

என்று புரோக்ஷணமும்,

"ஓம் அஸ்த்ராயபட் — அஸ்த்ராய ஃபட்"

என்று தாடனமும்,

"ஓம் கவசாய வௌஷட் — ௐ கவசாய வௌஷட்" என்று அப்யுக்ஷணமுஞ் செய்து விபூதியை வலக்கையால் மூடி வலது முழந்தாள் மேல் சிறிது உயரவைத்துக்

---

* இவ்வாறன்றி அடியில் வரும் பஞ்சகலா மந்திரங்களினலும், ஸம்ஹிதா மந்திரங்களினலும் விபூதியை அபிமந்திரித்த பின்பு இராக்ஷதர்பொருட்டுத் தெறித்தலுமுண்டு.

கொண்டு விதிப்படி தஹிக்கப்படாத அக
ற்ப விபூதியாகில்,

## பஞ்சகலாமந்திரம்

பஞ்சகலாமந்த்ரம்.

ஓம் நிவிருத்தி கலாயை நம: - ஓம் நிவ்ருத்தி கலாயை நம:

ஓம் ப்ரதிஷ்டா கலாயை நம: - ஓம் ப்ரதிஷ்டா கலாயை நம:

ஓம் வித்யா கலாயை நம: - ஓம் வித்யா கலாயை நம:

ஓம் சாந்தி கலாயை நம: - ஓம் ஶாந்தி கலாயை நம:

ஓம் சாந்தியாதீத கலாயை நம: - ஓம் ஶாந்த்யாதீத கலாயை நம:

என்னும் பஞ்சகலா மந்திரங்களினாலும்

## பஞ்சபிரம்ம மந்திரம்

பஞ்சப்ரஹ்ம மந்த்ரம்

ஓம் ஈசானாய நம: - ஓம் ஈஶாநாய நம:

ஓம் தத்புருஷாய நம:- 𑌓𑌂 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌨𑌮𑌃

ஓம் அகோராயநம: - 𑌓𑌂 𑌅𑌘𑍋𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃

ஓம் வாமதேவாய நம: - 𑌓𑌂 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃

ஓம் ஸத்யோஜாதாய நம: - 𑌓𑌂 𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌾𑌯 𑌨𑌮𑌃

என்னும் பஞ்சபிரம்ம மந்திரங்களினலும்

## ஷடங்க மந்திரம்

### 𑌷𑌡𑌙𑍍𑌗𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂

ஓம் ஹ்ருதயாய நம: - 𑌓𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃

ஓம் சிரஸே நம: - 𑌓𑌂 𑌶𑌿𑌰𑌸𑍇 𑌨𑌮𑌃

ஓம் சிகாயை நம: - 𑌓𑌂 𑌶𑌿𑌖𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃

ஓம் கவசாய நம: - 𑌓𑌂 𑌕𑌵𑌚𑌾𑌯 𑌨𑌮𑌃

ஓம் நேத்ரேப்யோ நம: - 𑌓𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃

ஓம் அஸ்த்ராயநம: - 𑌓𑌂 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃

என்னும் ஷடங்கமந்திரங்களினலும் அபிமந்திரித்துப் பின்.

ஓம் அஸ்த்ராயபட் — ஓ° ௬ஸூாய ஷடு

என்று திக்பந்தனமும்.

ஓம் கவசாய வெளஷட் - கவவாய்வளஷடு

என்று அவகுண்டனமுஞ் செய்க.

(விதிப்படி சிவாக்நியினல் தஹிக்கப்பட்ட கற்ப அநுகற்ப விபூதியாகில் பஞ்சகலா மந்திரம் ஜபிக்கவேண்டுவதில்லை.)

பஞ்சபிரம்ம மந்திரமும், ஷடங்கமந்திரமும் ஆகிய பதினெரு மந்திரங்களுமே ஸம்ஹிதா (ஸஂஹிதா) மந்திரமெனப் பெயர் பெறும்.

## க. விபூதி ஸ்நானம்

### விஹூதிஸூாநு.

வலக்கையின் பெருவிரல் அணிவிரல்களால் சிறிது விபூதியை எடுத்துச் சிரசுமுதல் பாதம் வரையிலும் பரிசித்துத் தன்னை

அபிஷேகஞ் செய்துகொண்டதாகப் பா
வித்து இடக்கையிலுள்ள விபூதியைச்சிறு
விரல் நீங்கிய நான்குவிரல்களைச் சேர்த்த
லாகிய நிரோதான முத்திரையினாலே*
"ஓம் ஹ்ருதயாய நம:-ஓம் ஹ்ருதயாய நமஃ"
என்று ஜலம்விட்டு
"ஓம் கவசாய வௌஷட் - ஓம் கவசாய
வௌஷட்" என்று குழைத்து நடுவிரல்
கள் மூன்றினாலே
"ஓம் ஈசானாயநம:-ஓம் ஈசானாய நமஃ"
என்று சிரசிலே மூன்றுதரமும்,
"ஓம் தத்புருஷாயநம:-ஓம் தத்புருஷாய
நமஃ" என்று நெற்றியிலே மூன்றுதரமும்,
"ஓம் அகோராய நம: - ஓம் அகோராய
நமஃ" என்று மார்பிலே மூன்றுதரமும்,
"ஓம் வாமதேவாய நமஃ - ஓம் வாமதேவா

---

* பெருவிரலோடுகூடிய நடுவிரலினாலும் ஜலம் விடுதலுமுண்டு.

ய நம:" என்று மார்பிலே ஒருதரமும் "ஓம் ஸத்யோஜாதாய நம: - ஓம் ஸத்யோ ஜாதாய நம:" என்று வலமுழந்தாள் இடமுழந்தாள், வலப்புஜம் இடப்புஜம் வல முழங்கை இட முழங்கை, வல மணிக்கட்டு இட மணிக்கட்டு, வலவிலா இடவிலா, முதுகு, கழுத்து என்னும் மற்ற அங்கங்களிலே ஒவ்வொருதரமுந் திரிபுண்டரமாகத் தரிக்க.

த்ரிபுண்டரம் - மூன்று ரேகைகளாக தரித்தல் - திரி - மூன்று, புண்டரம் - ரேகை.

நெற்றியிலும், மார்பிலும், புஜங்களிலும், அவ்வாறங்குல நீளமும், மற்ற அங்கங்களில் ஒவ்வோரங்குலநீளமும், சுத்தியின் பொருட்டு இடை இடையே அஸ்திரமந்திரத்தை நினைந்துகொண்டு தரித்தல்வேண்டும். மூன்று ரேகைகளின் இடைவெளி ஒவ்வோரங்குல அளவினதாய் இருத்தல்

வேண்டும். விபூதியை அணியும்போது வலது கைக்குச் சாதனமாக இடதுகையும் பின்பற்றவேண்டும். நெற்றியிலே அரைவர் கடைப்புருவ வெல்லையளவுந் தரித்தலும் விதியே.

## கச. மந்த்ரஸ்நானம்.

### ௨௦ ஸூத்ரம்.

எஞ்சிய விபூதியோடு வலதுகை நிறைய ஜலம்விட்டு அக்கையை முஷ்டியாகப் பிடித்துக்கொண்டு இடதுகையால் மூடிக்கொள்ளுதலாகிய கும்பகமுத்திரையினாலே.

"ஓம் ஈசாநாய நம:-ஓம் ஈசாநாய நம:" என்பது முதலிய பஞ்சபிரம்ம மந்திரங்களையுச்சரித்து,

"ஓம் சிவாயவௌஷட் - ஓம் ஶிவாயவௌஷட்" என்று சிரசிலே புரோக்ஷித்துவிட்டு,

"ஓம் அஸ்த்ராயபட் - ஓ० ஜஸ்ராய ஫ட"
என்று தாளத்திரயஞ் செய்து,

சிந்திய விபூதியைப் பெருவிரல் நீங்கிய மற்ற விரல்களைக் கெட்டியாய்ப் பிடித்ததலாகிய ஸம்ஹார முத்திரையினாலே,

"ஓம் ஹ்ருதயாயநம:-ஓ० ஹ்ருதயாய நமஃ"
என்று இருதயத்திலே ஒடுக்கிக்கொள்க.

## கஉ. மானஸ ஸ்நானம்

### மாநஸ ஸ்நாநம்.

முன்போல ஆசமனம், அதரசுத்தி, தோடுமிடம் ஆகிய இவற்றைச் செய்து,

"ஓம் சிவாய நம: - ஓ० ஶிவாய நமஃ"
என்று நாதாந்தமாக உச்சரித்துப் புருவமத்தியென்னும் பிந்துஸ்தானத்திலுள்ள அமிர்தத்தால் தன்னுடைய தேகம் உள்ளும்புறமும் நனைந்ததாகப்பாவிக்க.

## ௧௬. சகளீகரணம்

### ஸகளீகரணம்.

௧-வது கரந்யாஸம்-கரந்யாஸ:.

பின்முன்போல கரசுத்திசெய்து

“ஓம் சக்தயேவௌஷட்-ஓம் ஶக்த்யை வௌஷட்” என்று இரண்டு கைப்பெருவிரல்களையும் உள்ளடக்கிக் கைகளைக் கூப்பி சக்தியமிர்தத்தால் கைகள் நனைந்ததாகப் பாவித்துப்பின் குவித்த விரல்களை விரித்துப் பெருவிரல்களினாலே,

“ஓம் ஹ்ருதயாயநம:-ஓம் ஹ்ருதயாய நம:” என்று சிறுவிரல்கள் மத்தியிலும்,

“ஓம் சிரஸே நம: - ஓம் ஶிரஸே நம:” என்று அணிவிரல்கள் மத்தியிலும்,

“ஓம் சிகாயை நம:-ஓம் ஶிகாயை நம:” என்று நடுவிரல்கள் மத்தியிலும்,

"ஓம் கவசாய நமஃ - ஓ௦ கவசாய நமஃ" என்று சுட்டுவிரல்கள் மத்தியிலும் நிய சித்து (தொட்டு)ப்பின் இரண்டு உள்ளங்கை களில்,

"ஓம் நேத்ரேப்யோ நமஃ - ஓ௦ நேத்ரேப்யோ நமஃ" என்று மடக்கிய நடுமூன்று விரல்களினுலும் நியசித்து

"ஓம் அஸ்த்ராயபட் - ஓ௦ அஸ்த்ராயபட்", என்று சுட்டுவிரல்களினுலே பெருவிரல் கள் மத்தியில் நியசித்து

"ஓம் கவசாயவௌஷட் - ஓ௦ கவசாய வௌஷட்" என்று இரண்டுகைகளேயுஞ் சுற்றுதலாகிய அவகுண்டனஞ்செய்து,

"ஓம் சிவாய வௌஷட் - ஓ௦ ஶிவாயவௌ ஷட்" என்று இரண்டு கைகளேயும் கூட்டிக் குவிக்க.

(பஞ்சபிரம்மநியாசம் சமய தீக்ஷிதர்களு

க்கு விதிக்கப்படவில்லை யாதலின் அவர்கள் விரல்நுனிகளைத் தொடுதல்கூடாது.)

உ-வது அங்கந்யாஸம்-ஐ ந்யாஸம்.

"ஓம் ஹ்ருதயாய நம: - ஓம் ஹ்ருதயாய நம:" என்று வலக்கைப் பெருவிரலோடு கூடிய சிறுவிரலினாலே இருதயத்திலும்.

"ஓம் சிரஸே நம: - ஓம் ஶிரஸே நம:" என்று பெருவிரலோடு கூடிய அணிவிரலினாலே சிரசையும்,

"ஓம் சிகாயை நம: - ஓம் ஶிகாயை நம: என்று பெருவிரலோடுகூடிய நடுவிரலினாலே சிகையென்னுங் குடுமியிலும் நியசித்து,

"ஓம் கவசாயவௌஷட் - ஓம் கவசாயவௌஷட்" என்று இரண்டு கைச் சுட்டுவிரல்களினாலே கழுத்தை ஸ்தன நடுவரையிலுஞ் சுற்றி,

"ஓம் நேத்ரேப்யோ நமஃ - ஓ° நெநெத்ரு ஹ்யா நமஃ" என்று நிமிர்த்திய நடுமூன்று விரல்களினாலே வலக்கண், இடக்கண், நெற்றிக்கண் ஆகிய இவற்றை நியசித்து

"ஓம் அஸ்த்ராயபட் - ஓ° க்ஷுராயஹுட்" என்று வல உள்ளங்கையிலே இடக்கையணிவிரலினாலும் இட உள்ளங்கையிலே வலக்கை யணிவிரலினாலும் நியசித்து

"ஓம் அஸ்த்ராயபட் - ஓ° க்ஷுராய ஹுட்" என்று வலக்கைப் பெருவிரலொழிந்த விரல்களினாலே இடவுள்ளங்கையிலே மூன்றுதரந் தட்டுதலாகிய தாளத்திரயஞ்செய்து

"ஓம் அஸ்த்ராயபட் - ஓ° க்ஷுராய ஹுட்" என்று சோடிகை முத்திரையினாலே சிரசிலே பத்துத் திக்குகளிலுந் திக்பந்தனஞ் செய்து

"ஓம் கவசாயவௌஷட் - ஓம் கவசாயவௌஷட்" என்று சுட்டுவிரல் நீட்டிய கையினாலே சிரசிலே அவகுண்டனஞ்செய்து "ஓம் சிவாய வௌஷட் - ஓம் ஶிவாயவௌஷட்" என்று சிரசுமுதல் பாதபரியந்தம் மஹாமுத்திரை காட்டிவிடுக.

## கச. பிராணாயாமம் - ப்ராணாயாம:.

வலக்கைச் சுட்டு விரலையும் நடு விரலையும் உள்ளே மடக்கிப் பெருவிரலினாலே வலது நாசியை யடைத்து "ஓம் ஈசானாயநம:-ஓம் ஈஶாநாய நம:" என்பது முதலிய பஞ்சபிரம்ம ஷடங்க மந்திரங்களை யுச்சரித்துப்பின் பெருவிரல் அணிவிரல்களினாலே வலஇடநாசிகளிரண்டையும் அடைத்து அதேமந்திரங்களையுச்சரித்துப் பிறகு அணிவிரலினாலே இடது நாசியைமட்டும் அடைத்து மீட்டும் அவ்வாறே அதே மந்திரங்களை யுச்சரித்து

"ஓம் சிவாயநமஃ - ஓ॰ ஶிவாய நமஃ" என்று வலச்செவியை வலக்கையால் பொத்துக.

வலநாசியை அடைக்கும் பொழுது புறத்தேயுள்ள சுத்தவாயுவை இடநாசியிலே வாங்கி உள்ளே நிறப்புக—இதுபூரகம். இரண்டுநாசிகளையும் அடைக்கும்பொழுது உள்ளேவாங்கிய வாயுவைப் புறத்தே செல்லவிடாமல் அங்கேநிறுத்துக. இது கும்பகம். இடநாசியை அடைக்கும் பொழுது உள்ளேநிறுத்திய வாயுவை வலநாசியினாலே வெளியில்விடுக. இதுரேசகம். இவ்வாறு கவனமாகச்செய்து பிராணனை யடக்கிவரின் சிலவியாதிகள் பீடிக்காதிருப்பதற்கும் பீடித்தவியாதிகளிற் சில நீங்குதற்கும முக்கிய ஹேதுவாகும். அன்றியும் நாளடைவில் யோகாப்பியாசமுங் கைகூடும். ஆத்மதரிசனமு முண்டாகும். இது அநுபவசித்தம்.

# கரு. அம்ருதீகரணம் *

## அம்ருதீகரணம்.

வலதுகைச் சுட்டுவிரலை வளைத்து மற்ற விரல்களை மடக்குதலாகிய அங்குசமுத்திரையினாலே புருவநடுவிலுள்ள அமிர்தத்தைத் தொட்டு அதை எடுத்ததாகப் பாவித்து ஜலத்தினிடத்தே வைத்து கவிழ்ந்த பதாகை முத்திரையினாலே மூடி

"ஓம் சிவாயநமஃ - ௐ ஶிவாய நமஃ"

என்று அந்தஜலத்தை யபிமந்திரித்துச் சிவதீர்த்தமாகப் பாவித்து

"ஓம் அஸ்த்ராயபட் - ௐ அஸ்த்ராய ஃபட்"

என்று திக்பந்தனமும்,

"ஓம் கவசாயவௌஷட் - ௐ கவசாய வௌஷட்" என்று அவகுண்டனமுஞ்செய்து

"ஓம் சிவாயவௌஷட் - ௐ ஶிவாய வௌஷட்" என்று தேநுமுத்திரையுங்கொடுக்க.

---

*சிவதீர்த்தகரணமென்னுங் கூறுப.

## ௧௬. சந்தியாவந்தனம்

## 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌵𑌨𑍍𑌦𑌨𑌮𑍍.

௧-வது. பிராதக்காலசந்தி-𑌪𑍍𑌰𑌾𑌤𑌃𑌕𑌾𑌲𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾.

பிராதக்காலத்திலே தியானிக்கப்படுஞ் சந்தியாசக்தி ப்ராம்ஹீ (𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀) எனப்படும். இந்தச் சக்தியைத் தியானிக்கும் விதம் வருமாறு:—

(𑌶𑍍𑌲𑍋) 𑌰𑌕𑍍𑌤𑌭𑍂𑌷𑌾𑌂 𑌪𑌰𑌾𑌂 𑌰𑌕𑍍𑌤𑌾𑌂
𑌜𑌟𑌾𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌿𑌨𑍀𑌂 ।
𑌹𑌂𑌸𑌵𑌾𑌹𑌾𑌸𑌨𑌾𑌂 𑌬𑌾𑌲𑌾𑌂
𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌞𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾𑌂 ॥
𑌸𑍍𑌰𑍁𑌗𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌿𑌨𑍀𑌂 𑌦𑌕𑍍𑌷𑍇
𑌵𑌾𑌮𑍇 𑌦𑌣𑍍𑌡𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍂𑌂 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀𑌮𑍀𑌦𑍃𑌶𑍀𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍
𑌪𑍍𑌰𑌾𑌤𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑌿𑌤𑍇𑌂𑌬𑌰𑍇 ॥

ரக்தபூஷாம் பராம் ரக்தாம்
ஜடாயஜ்ஞோபவீதிநீம்,

ஹம்ஸபத்மாஸநாம் பாலாம்
சதுர்வக்த்ராஞ் சதுர்புஜாம்,
ஸ்ருகக்ஷமாலினீம் தக்ஷே
வாமே தண்டகமண்டலாம்,
ப்ராம்ஹீ மஷ்டத்ருஸீம் த்யாயேத்
ப்ராதஸ்தாரகிதேம்பரே.

(இதன்பொருள்) சிவந்த ஆபரணங்களும், சிவந்தபட்டாடையும், சிவந்த நிறமும் உடையவளாய், ஜடையும் பூணூலும் உடையவளாய், அன்னவாகனத்தின்மீது பத்மாசனத்தில் உட்கார்ந்திருக்கையும், பாலப் பருவமும், நான்கு முகமும், நான்கு கைகளும், வலக்கரங்களில் சிருக்கும் அக்ஷமாலையும், இடக்கரங்களில் தண்டுங் கமண்டலமும் உடையவளாய், ப்ராம்ஹீ என்னும் பேருடையவளாய், எட்டு நேத்திரங்களு முடைய தேவியைத் தியானிக்க.

உ-வது சாயங்காலசந்தி - ஸாயஞ்ஞாஸாஸந்தி. க

சாயங்காலத்திலே தியானிக்கப்படும் சந்தி

யாசக்தி ரௌத்ரீ (𑌰𑍌𑌦𑍍𑌰𑍀) எனப்படும். இந்தச் சக்தியைத் தியானிக்கும் விதம் வருமாறு,

ஶ்லோ. 𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌦𑌳𑌾𑌭𑌾𑌸𑌾𑌂
𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌚𑍍𑌚𑌲𑌿𑌤 𑌯𑍌𑌵𑌨𑌾𑌂 ।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌣𑍇𑌤𑍍𑌰𑌾𑌞𑍍𑌚
𑌜𑌟𑌾𑌕𑌣𑍍𑌡𑍇𑌨𑍍𑌦𑍁𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌂 ॥
𑌤𑍍𑌰𑌿𑌶𑍂𑌲𑌾𑌕𑍍𑌷𑌧𑌰𑌾𑌂 𑌦𑌕𑍍𑌷𑍇
𑌵𑌾𑌮𑍇𑌸𑌾𑌯𑌕 𑌶𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌂 ।
𑌰𑍌𑌦𑍍𑌰𑍀𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌦𑍍𑌵𑍃𑌷𑌾𑌬𑍍𑌜𑌸𑍍𑌥𑌾𑌂
𑌕𑌾𑌲𑍋𑌰𑍍𑌧𑌾𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑍇 𑌰𑍁𑌣𑍇 ॥

நீலோத்பலதளாபாஸாம்
கிஞ்சிச்சலித யௌவனாம்
சதுர்புஜாம் த்ரிணேத்ராஞ்ச
ஜடாகண்டேந்து மண்டிதாம்,
த்ரிசூலாக்ஷதராம் தக்ஷே
வாமேஸாயய ஸக்திகாம்
ரௌத்ரீம் த்யாயேத் வ்ருஷாப்ஜஸ்தாம்
காலோர்த்தாஸ்தமிதே ருணே.

(இ.-ள்) கருநெய்தற் புஷ்பம்போன்ற காந்தியுள்ளவளும், சற்றே யெளவனந் திரும்பிய பருவமும், நான்கு கைகளும், மூன்று கண்களும், ஜடையும், பூணூலும், சிரசிலே மூன்றாம்பிறைச் சந்திரனும் உள்ளவளாயி, வலது கைகளில் சூலமும், ஜபமாலையும், இடது கைகளில் அபயமும் சக்தி ஆயுதமும் உடையவளாய், ரிஷபவாகனத்தின்மீது பத்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் ரௌத்ரியைத் தியானிக்க.

இவ்விருசக்திகளும் பிரமருத்திரர்களை அதிஷ்டித்துக் கொண்டிருத்தலால் இவர்களைச் சர்வகிருத்தியங்களுக்கும் சாக்ஷியாயிருக்கிற பரமசிவத்தின் சக்தியாக நிச்சயித்து ஹ்ருதயத்திலே சத்துவகுணமுள்ள ப்ராம்ஹியையும், பிரமரந்திரத்திலே தாமசகுணமுள்ள ரௌத்ரியையும் தியானித்து ப்ராம்ஹியினுடைய செவ்வொளி மண்டலத்தினுள்ளும், ரௌத்ரியினுடைய நீலவொளி

மண்டலத்திலுள்ளும் தன்னுடைய ஆத்மா வும் சரீரமும் அடங்கினவைகளாகப் பாவித் துக்கொள்க.

(மாத்யாஹ்நிக சந்தியாசக்தி வைஷ்ண வியாதலின் அத்தேவியின் தியானம் முக்கிய மாய் நிர்வாண தீக்ஷிதர்களுக்கே உரியதாத லால் அது இங்கு கூறப்பட்டிலது.)

## கஎ. மார்ஜனம் - ௬௭ஜ-௨ நடு.

பிறகு சிவதீர்த்தத்தை வலக்கையாலெடுத்து "ஓம் ஹ்ருதயாயநம:-ஓம் ஹ்ருதயாய நம:" என்று இடது கையில் விட்டுக் கும்பக முத்திரையாகப் பிடித்துக்கொண்டு "ஓம் ஈசானாய நம:-ஓம் ஈசானாய நம:" என்பதுமுதலிய பஞ்சபிரம்ம ஷடங்கமந் திரங்களை யுச்சரித்து "ஓம் சிவாய வௌஷட் - ஓம் ஶிவாய வௌ ஷட்" என்று சிரசிலே புரோக்ஷித்துக் கொள்க.

மீளவும் தீர்த்தத்தை வலதுகையால் மூடி "ஓம் ஈசானாய நமஃ-ஓம் ஸம்ஸ்நாய நமஃ" என்பது முதலிய பஞ்சபிரம்ம ஷடங்கமந்திரங்களினாலே அபிமந்திரித்து வலக்கையினாலே தீர்த்தத்தை யெடுத்து இடக்கையில் விட்டு அந்தக் கையினின்றும் விரலிடைகளின் வழியாய்க் கீழே ஒழுகுகிற தீர்த்தத்தை வலதுகையால் "ஓம் ஈசானாய வௌஷட்-ஓம் ஸம்ஸ்நாய வௌஷட்" என்பது முதலிய வௌஷடந்த பஞ்சபிரம்ம ஷடங்கமந்திரங்களால் மந்திரத்துக்கொருமுறை சிரசிலே புரோக்ஷித்துக்கொள்க.

## ௧௮. அகமர்ஷணம் - அகமர்ஷணம்.

பின்பு மீதியாயிருக்குஞ் சிவதீர்த்தத்தை இடது கையினின்றும் வலது கையில் விட்டு நாசிகளுக்குச் சமீபமாய்ப் பிடித்துக்கொண்டு அந்தத்தீர்த்தம் வெண்ணிறமுடை

ய கருமசொரூபமாகி இடது நாசியின்வழி யாக உள்ளேசென்று அங்குள்ள பாவமனைத் தையும் அடியோடு நாசஞ் செய்ததாகவும் அந்தப்பாவம் கருத்த மைக்குழம்புபோல வலதுநாசியின் வழியாய்ப் புறப்பட்டு வெளி யேவந்து கரத்தில் தங்கியதாகவும் தியானி த்து அதைவலதுகாற் பெருவிரலில் ஜ்வா லிக்கும் அக்நியிலே.

"ஓம் அஸ்த்ராய ஹூம்பட் - ஓம் அஸ்த்ராய ஹும்பட்" என்று புருவநெரிப்புடனே விட்டு அந்தப் பாவம் பஸ்மமானதாகப் பாவித்து

"ஓம் அஸ்த்ராயபட் - ஓம் அஸ்த்ராய பட்" என்று கைகழுவுக.

## ௧௬. கவசவெஷ்டனம்

கவசவெஷ்டநம்.

பிறகுமுன்போல் ஆசமனம், அதாசுத் தி, தொடுமிடம் இவற்றைச்செய்து, சகளீ

கரணமுஞ்செய்து, வலதுகையினால் அமிர்த மயமான தீர்த்தத்தை யெடுத்து
"ஓம் கவசாய வௌஷட் - ஓம் கவசாய வௌஷட்" என்று தன்னை வலமாகச் சுற்றுக.

## ௨0. தர்ப்பணம் - தவ்பணம்.

இரண்டுகைகளும் நிறைய ஜலத்தை எடுத்து
"ஓம் சிவாய ஸ்வாஹா-ஓம் ஶிவாய ஸ்வாஹா"
என்று மூன்றுமுறை தர்ப்பணஞ்செய்து
"ஓம் சிவாய நமஃ-ஓம் ஶிவாய நமஃ" என்று
பத்துரு ஜபித்து
"ஓம்சிவாய ஸ்வாஹா-ஓம் ஶிவாய ஸ்வாஹா"
என்று மீட்டும் ஒருமுறை தர்ப்பணஞ் செய்து
"ஓம் ஈசானாய ஸ்வாஹா - ஓம் ஈஶானாய ஸ்வாஹா" என்பது முதலிய பஞ்சபிரம்ம ஷடங்க மந்திரங்களினாலே ஒவ்வொரு முறை தர்ப்பணஞ்செய்து
"ஓம் உமாதேவ்யை ஸ்வாஹா -ஓம் உமாதே

வே ஸ்வாஹா''

"ஓம் கணபதயே ஸ்வாஹா-ஓம் கணபதயே ஸ்வாஹா''

"ஓம் சரவணபவாய ஸ்வாஹா-ஓம் சரவணபவாய ஸ்வாஹா'' என்றுமந்திரத்துக் கொருமுறை தர்ப்பணஞ் செய்க.

பிறகு முன்போல் ஆசமனம், ஆதாசுத்தி, தொடுமிடம் ஆகிய இவற்றையும் சகளீகரணத்தையுஞ் செய்க.

## உக. தீர்த்தோபஸம்ஹாரம்

தீர்த்தோபஸம்ஹாரம்.

முன்னே புருவ நடுவினின்றும் எடுத்து ஜலத்தினிடத்திலே வைக்கப்பட்ட அமிர்தத்தைப் பெருவிரல்நீங்கிப் மற்றவிரல்களைக் கெட்டியாய்ப் பிடித்தலாகிய ஸம்ஹார முத்திரையினாலே

"ஓம் ஹ்ருதயாய வௌஷட்-ஓம் ஹ்ருதயாய வௌஷட்'' என்றுஎடுத்துப்புருவநடுவிலே ஒடுக்கிக்கொள்க.

## உஉ. சூர்யோபஸ்தானம்

### ஸூர்யோபஸ்தாநம்.

இரண்டுகை நிறைய தீர்த்தம் விட்டுப் பிடித்துக்கொண்டு

"ஓம் ஈசானாயநம: - ஓம் ஈசானாய நம:"

என்பது முதலிய பஞ்சபிரம்ம ஷடங்கமந்திரங்களை ஜபித்து

"ஓம் சிவாய ஸ்வாஹா - ஓம் சிவாய ஸ்வாஹா"

என்று சூரியமூர்த்தியின் மத்தியிலிருக்கும் உயர்காயத்ரியின் தேவதையும், ஸர்வபலகர்மதாதாவுமான ஸவிதாவெனப்படும் சர்வ தேவாந்தர்யாமியாகிய பர்க்கனென்னும் பரமசிவனிடத்தே கொடுத்து

"ஓம் சிவஸ்ஸூர்யாய ஸ்வாஹா - ஓம் சிவ ஸூர்யாய ஸ்வாஹா" என்று ஒருமுறை தர்ப்பணஞ் செய்துவிடுக. அநாவது அநுஷ்டானபலத்தை அந்தப் பர்க்கமூர்த்திக்குத் தத்தஞ்செய்க.

## உரு. ஜபநிவேதனம்

[illegible]

பின்பு பதுமாசனம் முதலிய ஆசனங்களில் உட்கார்ந்துகொண்டு பிராணாயாமமும் சகளீகரணமுஞ்செய்து மனதை ஒருவழிப் படுத்திக்கொண்டு தலையுங்கழுத்தும் உடம்பின்மீது செவ்வேதளராமல் நிலையாக நிறுத்தி ஐம்புலன்களையும் அடக்கி

"ஓம் சிவாய நம: - [illegible]"

என்னும் சிவமூலமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டுருவும்,

"ஓம் ஈசானாயநம: - [illegible]"

என்பனாதி பஞ்சபிரம்ம ஷடங்க மந்திரங்களை ஒருமுறையும்,

"ஓம் உமாதேவ்யை நம: - [illegible]" என்னும் தேவிமூலமந்திரத்தைப் பத்துருவும்,

"ஓம் கணபதயே நம: - [illegible]

நம:'' என்னும் கணபதி மூலமந்திரத்தைப் பத்துருவும்,

"ஓம் சரவணபவாயநம:-ௐ ஶரவணபவாய நம:" என்னும் சுப்ரமண்ய மூல மந்திரத்தைப் பத்துருவும் ஜபித்துப் பிராணாயாமமும் சகளீகரணமுஞ்செய்து அன்புமயமாகி அடியில்வருமாறு உள்ளங்கசிந்துருகும்படித் தோத்திரஞ் செய்க.

## சிவஸ்தவம்.

வேதநாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி, மாதொருபாகா போற்றி மறுசமயங்கள் மாளப், பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான்செய், பாதகமனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ, வேண்டுமயன்மாற் கரியோய்நீ வேண்டியென்னைப் பணிகொண்

டாய், வேண்டி நீயாதருள் செய்தாயானும அதுவே வேண்டினல்லால், வேண்டும் பரிசொன்றுண்டென்னி லதுவுமுன்றன் விருப்பன்றே.

## தேவி ஸ்தவம்.

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச், சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க, அரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால், சுரந்தளித்த சிவகாம சுந்தரி பூங்கழல்போற்றி.

## கணபதி ஸ்தவம்.

அரியசஞ்சித மகலவும்
பெரியுடம்பிட ரொழியவும்
விரியுநம்பவ மெரியவும்.
கரிமுகன்கழல் கருதுவாம்.

## சுப்ரமண்ய ஸ்தவம்.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி, ஏவருந் துதிக்கநின்ற வீரா

ஆறுதோள்போற்றி காஞ்சி, யாவடிவைகுஞ் செவ்வேள் மலரடிபோற்றி யன்னான், சேவலுமயிலும்போற்றி திருக்கைவேல்போற்றி போற்றி.

## நால்வர் ஸ்தவம்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி, ஆழிமிசைகன் மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி, வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி, ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள்போற்றி.

## அறுபத்துமூவர் ஸ்தவம்.

[illegible]த்துமூதெயின் மூன்றுந்தழலெழ
[illegible]மூரான் முகிழ்த்த நிராமய
சித்த மூர்த்திதன் றாளிணை சேரறு
பத்துமூவர் பதமலர் போற்றுவாம்.

இவ்வாறு ஸ்தோத்திரஞ்செய்து எழுந்து நின்று,

## உச. அஷ்டதிக் பாலகர் வந்தனம்.

"ஓம் இந்த்ராயநம: - 𑌓𑌂 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃"
என்று கிழக்கிலும்,

"ஓம் அக்நயேநம: - 𑌓𑌂 𑌅𑌗𑍍𑌨𑌯𑍇 𑌨𑌮𑌃"
என்று தென்கிழக்கிலும்,

"ஓம் யமாயநம: - 𑌓𑌂 𑌯𑌮𑌾𑌯 𑌨𑌮𑌃"
என்று தெற்கிலும்,

"ஓம் நிருதயேநம: - 𑌓𑌂 𑌨𑌿𑌰𑍃𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃"
என்று தென்மேற்கிலும்,

"ஓம் வருணாயநம: - 𑌓𑌂 𑌵𑌰𑍁𑌣𑌾𑌯 𑌨𑌮𑌃"
என்று மேற்கிலும்,

"ஓம் வாயவே நம: - 𑌓𑌂 𑌵𑌾𑌯𑌵𑍇 𑌨𑌮𑌃"
என்று வடமேற்கிலும்,

"ஓம் குபேராயநம: - 𑌓𑌂 𑌕𑍁𑌬𑍇𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃"
என்று வடக்கிலும்,

"ஓம் ஈசாநாயநம: - ஓம் ஈஶாநாய நம:"
என்று வடகிழக்கிலுங் கும்பிட்டு

## ௨௫. நமஸ்காரம்.

"ஓம் பார்வதீசமேத பரமேஸ்வராயநம: - ஓம் பார்வதீஸமேத பரமேஶ்வராய நம:"
என்று வடக்கு நோக்கி மூன்றுமுறை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து,
"ஓம் அஸ்த்ராயபட் - ஓம் அஸ்த்ராய பட்"
என்றுதானிருக்குமிடத்தை ஜலத்தினாற் றெளித்து அதனைத் தொட்டு இருகண்களிலும் ஒற்றிக்கொண்டு ஜலத்தைத்தூரத்திலே கால்படாதவிடத்தில் கொண்டுபோய் விட்டுவிடுக.

திருச்சிற்றம்பலம்.

நித்தியாநுஷ்டானம் முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அஷ்டஸம்ஸ்கார விளக்கம்.

## அதாவது - எண்வகைச் சுத்தியின் தத்துவார்த்தம்.

"அஷ்டஸம்ஸ்காரம்" என்பது எண்வகைச்சுத்தி என்று பொருள்படும். சைவாநுஷ்டானமாவது சைவக் கிரியைகளாவது செய்யுமிடத்து அவற்றிற்கு உபகரணமான பொருள்களை நிரீக்ஷணம், புரோக்ஷணம், தாடனம், அப்யுக்ஷணம், தாளத்திரயம், திக்பந்தனம், அவகுண்டனம், தேநு முத்திரை என்னும் எட்டுவகைகளால் பரிசுத்தஞ் செய்யும்படி சிவாகமங்கள் விதிக்கின்றன. அவை வருமாறு.

### நிரீக்ஷணம்

நிரீக்ஷணத்திற்குரிய முத்திரை "திவ்ய முத்திரை" என்று சொல்லப்படும். அது

வலக்கைப் பெருவிரலையும், அணிவிரலையுஞ் சேர்த்தலாம். அப்படிச் சேர்த்து அம்முத்திரையைக்கொண்டு வலக்கண், நெற்றிக்கண், இடக்கண் ஆகிய மூன்றையுந்தொட்டு ஒரு பொருளைப்பார்த்தலே நிரீக்ஷணமெனப்படும் அவ்வாறு நிரீக்ஷித்துப் பொருளைப்பார்த்தலால் அப்பொருளிலுள்ள குற்றங்கள்யாவுந் தகிக்கப்பட் டொழிந்துபோக அதில் அமிர்தம் பொழியப்பட்டு அது நிர்மலத்தன்மையெய் துகின்றது.

அஃதெவ்வாறெனின் வலக்கண் ஆதித்தமண்டல வடிவாயும், இச்சாசக்தி சொரூபமாயும் விளங்கும். நெற்றிக்கண் அக்னிமண்டல வடிவாயும், ஞானசத்தி சொரூபமாயும் விளங்கும். இடக்கண் சந்திரமண்டல வடிவாயும், கிரியாசத்தி சொரூபமாயும் பிரகாசிக்கும். வலக்கண்ணாகிய ஆதித்தநோக்கால் ஒருபொருளைப் பார்க்கும்பொழுது அப்பொ

ருளிலுள்ள குற்றங்களனைத்தும் அவ்வாதித்த கிரணத்தால் அகற்றப்படுகின்றது.

நெற்றிக்கண்ணாகிய அக்கினிநோக்காற் பார்க்கும்பொழுது அவ்வக்கினியால் அக்குற்றங்கள்யாவும் பஸ்மமாக்கப்படுகின்றது, இடக்கண்ணாகிய சந்திரநோக்காற் பார்க்கும்பொழுது அச்சந்திர மண்டலத்திலுள்ள அமிர்தம் அதில்பொழியப்பட்டு அப்பொருளை நிர்மலமாக்குகின்றது. இதுவே நிரீக்ஷணஞ் செய்வதின் கருத்தாம். பௌதிகப் பொருள்களின் பௌதிகத்தன்மையை நீக்கி அருளாகிய சக்தியின் வடிவாகச்செய்தலே நிரீக்ஷணமுத்திரையின் முழுநோக்காம்.

## புரோக்ஷணம்

புரோக்ஷணத்திற் குரியமுத்திரை நிமிர்த்திய பதாகைமுத்திரை யென்று சொல்லப்படும். அது வலது கைவிரல்களைச் சேர்த்து நிமிர்த்தி நீட்டிமேலே உயர்த்துதலாம்.

அப்படிஉயர்த்துதலே புரோக்ஷணமெனப் படும். அவ்வாறு புரோக்ஷணஞ் செய்வது புருவநடுவிலுள்ள விந்து மண்டலத்திலிரு க்கும் அமிர்தத்தை அப்பொருளின்மேற் றெளித்தலாகும். அதனால்அப்பொருள் சிவ சம்பந்தமான கிரியைக்கு உபயோகமாகப் புனிதப்படுத்தப்பட்டது. ஒருவனுடைய புருவநடுவிலே விந்துமண்டலமும், பிரம்ம ரந்திரத்திலே சக்திமண்டலமும் விளங்கா நிற்கும், இம்மண்டலங்களிலுள்ள அமிர்தம் பொருள்களின் சுத்தியின்பொருட்டே தெ ளிக்கப்படுகின்றது. இதுவே புரோக்ஷணத் தின்கருத்தாம். சிவயோகிகளாயுள்ளவர் இ வ்வமிர்ததாரையின் இருப்பையும்,இதன்பிர யோசனத்தையும், இதனலெய்தும் பலனை யும் நன்குணர்வர்.

## தாடனம்

தாடனத்திற்குரிய முத்திரை வலதுசுட் டுவிரலை நீட்டி மற்றவிரல்களைமடக்கி அச்சுட்

டு விரலால் கீழ்நோக்கித்தட்டுதலாம். அப்படித்தட்டுதலே தாடனம் என்று சொல்லப்படும். அவ்வாறு தாடனஞ் செய்வதால் அப்பொருளிலுள்ள சித்து உடனே பிரகாசமாகின்றது. அது எதுபோலுமெனின் ஒருவன் ஒருகல்லையடிக்கும்பொழுது அதில் வியாபகமாய் மறைந்துகிடக்கின்ற அக்கினி உடனே வெளிப்படுவதுபோல ஜடமாகிய பொருளினிடத்து வியாபகமாய் அப்பிரகாசமாய் இருந்தசித்து இத்தாடனத்தால் பிரகாசமாகின்றது. இதுவே தாடனத்தின் கருத்தாம்.

## அப்புக்ஷணம்

அப்புக்ஷணத்திற்குரிய முத்திரை கவிழ்ந்த பதாகைமுத்திரை என்று சொல்லப்படும். அது வலதுகைவிரல்களைச் சேர்த்து நீட்டிமூடுதலாம். அப்படிமூடுதலே அப்புக்ஷணமெனப்படும். அவ்வாறு அப்புக்ஷணஞ் செய்வதால் அப்பொருளினிடத்துத் தோன்றிய சித்தின் பிரகாசமானது அப்பொருளை

விட்டு அகலாமல் சாந்நித்தியமாய் நிலைத்திருக்கும்படிச் செய்வதாகும். இதுவே அப்புக்ஷணத்தின் கருத்தாம்.

## தாளத்திரயம்

தாளத்திரயத்திற்குரிய முத்திரை வலக்கை பெருவிரலொழிந்த நான்கு விரல்களினாலே இடது உள்ளங்கையிலே மும்முறை தட்டுதலாம். திரயம்-மூன்று, அப்படிமூன்று முறை தட்டுதலே தாளத்திரயமென்று சொல்லப்படும். அவ்வாறு தாளத்திரயஞ் செய்வதால் அப்பொருளினிடத்துச் சாந்நித்தியமாய் விளங்கியிருக்கும் சித்தின் பிரகாசத்திற்கு விக்கினஞ் செய்யவருகின்ற அசுரர் முதலாயினோர் அம்மந்திரத்தின் அதிதேவதைக்குப்பயந்து அகன்றுபோகின்றார்கள். அது எதுபோலுமெனின் ஒருவன் ஸ்நான முதலியவைசெய்து பரிசுத்தனாய்ப்போகும் பொழுது அவனெதிரில் அசுத்தனொருவன் வரின் அவன் அவனை விட்டுஅகன்று போ

கும்வண்ணம் கைதட்டித் தாளமிடுதல்போல லாம், இதுவே தாளத்திரயத்தின் கருத்தாம்.

## திக்பந்தனம்

திக்பந்தனத்திற்குரிய முத்திரை சோடிகைமுத்திரை என்றுசொல்லப்படும். அது வலதுகைப்பெருவிரலடியைச் சுண்டுவிரலால் தொட்டு எட்டுத்திக்குகளிலும் தெறித்துக் காவலிடுவதாம். அப்படி தெறித்துக் காவலிடுவதே சோடிகைமுத்திரை எனப்படும். அவ்வாறு சோடிகைமுத்திரை செய்வதால் அஷ்டதிக்குகளிலுமுள்ள அசுரர்களும் இராக்ஷதர்களும் அங்குவந்து யாதொரு இடையூறுஞ்செய்யாமல் அம்மந்திர தேவதையின் ஆணைக்கஞ்சி அகன்றுபோய்விடுகின்றார்கள். இதுவே திக்பந்தனத்தின் கருத்தாம்.

## அவகுண்டனம்

அவகுண்டனத்திற்குரிய முத்திரை வலதுகைச்சுட்டுவிரல்நீட்டிய கையால்வளைத்தல் என்றுசொல்லப்படும். அப்படிச் சுற்றுவளை

த்தலை அவகுண்டனமாம். அவ்வாறு அவ குண்டனஞ் செய்வதால் அங்குபிரகாசித்திரு க்கும் சித்தின் இருப்பிடத்திற்கு மதிற்சுவ ரெழுப்பியதுபோல் அரண் செய்ததாகும். இதுவே அவகுண்டனத்தின் கருத்தாம்.

## தேநு முத்திரை

தேநுமுத்திரையே சுரபிமுத்திரை யென்று சொல்லப்படும். அது இரண்டுகைகளிலுமுள் ள விரல்களை இடைஇடையே கோத்துப்பசு வின் நான்கு முலைகள்போற் காட்டுதலாம். அப்படிக்காட்டுதலே தேநுமுத்திரை எனப் படும். அவ்வாறு தேநுமுத்திரை காட்டுவ தால் காமதேநு என்னுந் தெய்வப்பசு அவ் விடத்தில் பிரசன்னமாகி அந்தச்சித்துப்பொ ருளுக்குப் பாலபிஷேகஞ்செய்ததாகும். இது வே தேநு முத்திரையின் கருத்தாம்.

காமதேநுவின்பால் அமிர்தத்தினுஞ் சிறந்து அதிபரிசுத்தமாயுள்ளது. அது அபி ஷேக திரவியங்களுட் சிறந்தது.

இவ்வாறு அஷ்டஸம்ஸ்காரஞ்செய்து உபகரணப்பொருளைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டியது அத்தியாவசியகம். பரிசுத்தமில்லாதபொருள் எந்தக்கிரியையிலும் யாதொரு பயனையுந்தராது. அப்பொருளை உபகரணமாக வைத்துக்கொள்வதும் அப்பிரயோசனமே. ஆதலால் சைவக்கிரியா விதிகள் யாவும் உபகரணப் பொருள்களுக்கு எண் வகைச் சுத்திசெய்யும்படி விதிக்கின்றன. இவ்வுண்மையை முற்றுங் கடைப்பிடிக்க.

திருச்சிற்றம்பலம்,

அஷ்டஸம்ஸ்கார விளக்கம் முற்றிற்று.

சிவமயம்.

# அருஞ் சொற்பொருள் விளக்கம்.

---

அகமர்ஷணம். அகம்—பாவம். மர்ஷணம்—கெடுத்தல். அதாவது பாவத்தைக் கெடுத்தல் என்பது பொருள்.

அதரம்—உதடு.

அப்யுக்ஷணம்—மூடுதல்.

அவகுண்டனம்—சுற்றி வளைத்தல்.

ஆசமனம்—பானஞ் செய்தல்.

உத்தூளனம்—பரவப் பூசுதல்.

உபஸம்ஹாரம்—ஒடுக்கிக்கொள்ளுதல்.

உபஸ்தானம்—சார்தல், வழிபடுதல்.

உபாசனம்—வழிபடுதல்.

கரம்—கை.

கவசம்—காவற்செய்து கொள்ளல்.

சகளீகரணம். சகளன்-கலையோடு கூடினவன். கரணம்—செய்தல். அதாவது தன்னைச் சிவசொரூபமாக்கிச் கொள்ளல் என்பது அருத்தம்.

சந்தியாவந்தனம். சம்-செவ்வையாக. தியா-தியானித்து, வந்தனம்-நமஸ்கரித்தல்.

சிவதீர்த்தகரணம்-சிவதீர்த்தமாகச் செய்தல்

சுரபி—பசு.

தர்ப்பணம்—உவப்பித்தல்.

தாடனம்—தட்டுதல்.

திக்பந்தனம்—திசைகளைக் கட்டுதல்.

திரயம்—மூன்று.

திரிபுண்டரம்—மூன்றுரேகை.

தேநுமுத்திரை—பசுவின் முலை போன்ற முத்திரை.

நியாஸம்—பதித்தல்.

நிரீக்ஷணம்—பார்த்தல்.

நிவேதனம்—ஒப்பித்தல், கொடுத்தல்.

பஸ்மம்—விபூதி.

பிராணாயாமம். பிராணன்—பிராணவாயு. ஆயாமம்—தடுத்தல். அதாவது பிராண வாயுவை ரேசக பூரக கும்பகங்களால் தடுத்தல் என்பது தாற்பரியம்.

புரோக்ஷணம்—தெளித்தல், மேலே உயர்த்துதல்.

மார்ஜனம்—சுத்திசெய்தல்.

முத்திரை—அறிகுறி.

முஷ்டி—கைப்பொத்து.

வந்தனம்—நமஸ்காரம்.

வேஷ்டனம்—சுற்றுதல்.

ஸம்ஸ்காரம்—சுத்திசெய்து கொள்ளுங் கிரியை.

ஸ்தவம்—துதி.

ஸ்தோத்திரம்—துதி.

ஸ்நானம்—முழுகுதல்.

சிவமயம்.

# இந் நூலாசிரியரால் இயற்றிப் பதிப்பிக்கப்பட்ட நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| சித்தாந்த விளக்கம் | 0 | 2 | 0 |
| பன்னிரு திருமுறைத்திரட்டில் திருவாசகத்துக்கு (கூய) விஷய சூசனங்கள். (உருo) வேதப்பிரமாணங்களுடன் | 1 | 12 | 0 |
| விபூதிருத்திராக்ஷமஹத்வ விளக்கம் | 0 | 2 | 0 |
| பிரணவ வித்யாபரிமளம் என்னும் ஓங்கார விளக்கம் (நானூறு வேதப்பிரமாணங்களுடன்) | 2 | 4 | 0 |
| சைவநித்தியாநுஷ்டானம் (தமிழ் கிரந்த லிபிகளில் மந்திரங்களும் அஷ்டஸம்ஸ்கார விளக்கமும்) | 0 | 6 | 0 |

இவை அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

சோ. சிவ அருணகிரி முதலியார்,
"ஆனந்த நிலயம்" சோளங்கிபுரம்,
(வட ஆற்காடு ஜில்லா.)
Sholinghur, (North Arcot Dt.)